**பாரத ரிசர்வ் வங்கி**
**அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை**
**மைய அலுவலகம்**
**மும்பை 400 023**

நவம்பர் 13, 2001

A.P. (DIR Series) சுற்றறிக்கை எண் 11
A.P. (FL Series) சுற்றறிக்கை எண் 1

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வணிகர்கள் அனைவருக்கும்**

அன்புடையீர்,

**<u>வெளிநாட்டுச் சுற்றுலாவிற்கு அந்நியச் செலாவணி வெளியீடு – பணம் குறித்த பகுதி</u>**

ஈராக், லிபியா இஸ்லாமியக் குடியரசான இரான், ருஷிய கூட்டமைப்பு மற்றும் காமன் வெல்த் நாடுகளின் குடியரசான சுயேச்சை பிரதேசங்கள் தவிர மற்ற நாடுகளுக்கு சுற்றுலா செல்லவிருக்கும் பயணிகளுக்கு அயல்நாட்டு நாணயத்தை ரூபாய்த் தாளாகவோ, சில்லறைக் காசுகளாகவோ, 500 அமெரிக்க டாலர் அல்லது அதன் மதிப்புத் தொகையளவுக்கு வழங்க அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கும் முழுமையானப பண மாற்றாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகிறது. இத்தகைய நாடுகளுக்குப் பயணம் செல்வோருக்கான மேற்குறிப்பிட்ட உச்சவரம்புத் தொகை 200அமெரிக்க டாலர் அல்லது அதன் மதிப்புத் தொகையாக உயர்த்தப்பட்டு ரிசர்வ் வங்கியின் முன் அனுமதி இன்றியே அதை வழங்க அனுமதி அளிக்கப்படுகிறது. இதன்படி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களும் பண மாற்றாளர்களும் ஒட்டுமொத்தமாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட அயல்நாட்டு நாணயத்திலிருந்து இத்தகைய சுற்றுலா பயணிகளுக்கு 2000 அமெரிக்க டாலர் ( அல்லது அதன் மதிப்புத்தொகை) வரை விற்கலாம்.

2. அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கட்டளைகள் இந்த சுற்றறிக்கையில் அடங்கியுள்ள விவரங்களைத் தத்தம் குழு முகவரிகள் கவனத்திற்குக் கொண்டு செல்வாராக.

3. இந்த சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்